
மீட்பின் வரலாறு

# புண்ணியவான்களும் புண்ணியவதிகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பின் வரலாறு

# 6. புண்ணியவான்களும் புண்ணியவதிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Edited and Published by the Institute of the Heart of Jesus, printed at
St.Mary's Press, Beschi College, Dindigul - 624 004.
Cum permissu superiorum

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. அக்காலத்தில் யோபு என்னும் ஒரு மனிதர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஏழு புத்திரர்களும், மூன்று புத்திரிகளும் இருந்தார்கள். அவர் பெரும் செல்வந்தராயிருந்தார். மேலும் ஆயிரக்கணக்கான ஆடு மாடுகளும், ஒட்டகங்களும் அவருக்கிருந்தன.



2. அவர் மிகவும் நல்லவர், நேர்மையுள்ளவர். தீமைகளை விலக்கி, கடவுளுக்குப் பயந்து வாழ்ந்து வந்தார். அவர் கடவுளுக்குப் பலி செலுத்திக் கொண்டிருப்பதைப் பார்.



3. ஒரு நாள் வானதூதர்கள் கடவுள் முன்னிலையில் நின்றிருந்தபொழுது, சாத்தானும் (பிசாசுகளின் தலைவன்) அங்கே வந்தான். கடவுள் அவனை நோக்கி " எனது ஊழியன் யோபைப் பார்த்தாயா? எத்துணை பிரமாணிக்கத்துடன் எனக்கு ஊழியம் செய்கிறான்!" என்றார்.



4. " அவன் உமக்கு வீணாக, ஊழியம் செய்கிறதில்லை. அவனுக்கு ஏராளமான சொத்துக்களைக் கொடுத்திருக்கிறீர். அவற்றை எடுத்துக்கொள்ளும் அப்பொழுது பார்ப்போம். அவன் உம்மைப் புகழ்ந்து உமக்கு ஊழியம் செய்வானாவென்று!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





5. அவனை ஏழ்மை நிலைக்குத் தாழ்த்தினால், அவன் நிச்சயமாக உம்மைச் சபிப்பான்" என்று சவால் விட்டான் சாத்தான். யோபுடைய உடைமைகள் அனைத்தையும் பிடுங்கிக்கொள்ள கடவுள் சாத்தானுக்கு அனுமதி கொடுத்தார். ஒரு நாள் யோபின் பிள்ளைகள் அனைவரும் வெளியே சென்றிருந்தனர். அவர் மட்டும் வீட்டிலிருந்தார். அப்பொழுது அவரது வேலையாள் ஓடி வந்தான்.

6. "உமது ஒட்டகங்கள் மேய்ந்துகொண்டிருந்தன. திடீரெனத் திருடர்கள் வந்து வேலையாட்கள் அனைவரையும் கொன்றுவிட்டு, ஒட்டகங்களை ஓட்டிச் சென்றுவிட்டனர். நான் மட்டும் தப்பி, உம்மிடம் கூறுவதற்காக ஓடி வந்தேன்" என்றான் அந்த வேலையாள்.





7. சிறிது நேரத்திற்குப்பின் மற்றொரு வேலையாள் ஓடிவந்து, "வானிலிருந்து நெருப்பு மழைபோல் பெய்ததால் உமது ஆடு மாடுகள் அனைத்தும் மடிந்து சாம்பலாயின; வேலையாட்கள் அனைவரும் மடிந்தனர். நான் மட்டும் தப்பி, உமக்குத் தெரிவிப்பதற்காக ஓடி வந்தேன்" என்றான்.

8. அவன் இவ்வாறு கூறிக்கொண்டிருக்கும் சமயம், மூன்றாவது வேலையாள் ஓடிவந்து, "உமது பிள்ளைகள் அனைவரும் குதூகலமாய் உணவருந்தி ஆடிப்பாடிக்கொண்டிருந்தனர். திடீரென பயங்கரக் காற்று அடிக்கவே வீடு அதிர்ந்து, சரிந்து உம் பிள்ளைகள் மீது விழவே அனைவரும் மடிந்தனர்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9. தனது உடமைகள் யாவும் அழிந்து நிர்மூலமானதையும், பிள்ளைகள் அனைவரும் இறந்ததையும் யோபு கேள்விப்பட்டு, மிகவும் வருந்தினார். துக்கத்தால் தன் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்.



10. ஆனால், அவர் முறையிடவில்லை. ''இது அநியாயம், என்னால் தாங்கமுடியவில்லையே!'' என்று கூறவில்லை. மாறாக, ''கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் திரும்பவும் எடுத்துக்கொண்டார்'' என்று மட்டுமே சொன்னார்.



11. பின்னர் யோபு தரையில் தண்டனிட்டு, கடவுளை ஆராதித்து, ''தேவனுக்கு எப்படி சித்தமோ, அப்படியே ஆகக்கடவது. ஆண்டவருடைய நாமத்திற்குத் தோத்திரமுண்டாகக் கடவது'' என்று கூறினார்.



12. வானதூதர்கள் கடவுள் முன் நின்றுகொண்டிருந்தபொழுது, சாத்தான் மீண்டும் வந்தான். ''என் ஊழியன் யோபைப் பார்த்தாயா? எத்துனை பிரமாணிக்கமாய் எனக்கு ஊழியம் செய்கிறான்! பல துன்ப துயரங்கள் அவனுக்கு அனுப்பினேன். அவனிடமிருந்த எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டேன். எனினும், முன்போலவே எனக்கு மிகவும் பிரமாணிக்கமாயிருக்கிறான்'' என்று சாத்தானிடம் கடவுள் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13. ''ஒரு மனிதன் நற்சுகத்துடன் இருக்கும் வரை, தன் சொத்துக்களின் இழப்பை அவன் தாங்கிக்கொள்ள முடியும். ஆனால் அவன் உடலைத் தாக்கிப் பாருங்கள். அப்பொழுது அவன் உமக்குத் தொடர்ந்து ஊழியம் செய்து, உம்மைப் போற்றிப் புகழ்வானா என்று பார்ப்போம்'' என்று மீண்டும் சவால்விட்டான் சாத்தான்.



14. யோபை நோய்வாய்ப்படுத்த சாத்தானுக்கு அனுமதி அளித்தார் கடவுள். அது ஒரு பயங்கர நோய் தொழுநோயிலேயே அது மிக மோசமான இரகத்தைச் சார்ந்திருந்தது. யோபின் உடல் முழுவதும் பெரும் புண்கள் நிறைந்திருந்தன.



15. புண்ணின் துர்நாற்றம் அதிகரித்ததால், அவரை வீட்டில் வைத்துக்கொள்ள முடியவில்லை. திறந்த வெளியில், குப்பைமேட்டில் உட்கார்ந்து வசிக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்.



16. புண்களிலிருந்து சீழ் ஏராளமாக வடிந்து கொண்டிருந்தது. அவருக்கு உதவி செய்ய யாருமில்லை. அந்தோ பரிதாபம்! ஏழைத் தொழுநோயாளியான யோபு, தன் உடலில் படிந்திருந்த சீழை, மண் ஓட்டின் உதவியால் தானே வளித்து எடுக்கவேண்டிய நிலைக்கு ஆளானார். ஒரு நாள் அவரது மனைவி அவரைப் பார்க்கச் சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





17. கணவனைப் பார்த்ததும், '' கடவுள் உமக்கு அனுப்பியிருப்பதைப் பார். இவற்றை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு நீர் இன்னும் மதியீனராயிருக்கிறீரே! அவரைச் சபித்துவிட்டு உம் உயிரை மாய்த்துக் கொள்ளும். அப்பொழுது உம்மைவிட்டு எல்லாம் அகன்றுவிடும் '' என்றாள் மனைவி.

18. யோபு எழுந்து கூறுவார்: '' நீ முட்டாள்தனமாய் பேசிவிட்டாய். கடவுள் கையிலே பல நல்லவைகளைப் பெற்ற நாம், தீமைகளை ஏன் பெற்றுக்கொள்ளக்கூடாது?''





19. யோபு மண்டியிட்டு, '' ஆண்டவர் கொடுத்தார்; ஆண்டவர் எடுத்துக்கொண்டார். ஆண்டவரின் நாமம் புகழப்படுவதாக'' என்று கடவுளை ஆராதித்தார்.

20. யோபின் நண்பர்கள் அவரைப் பார்க்க வந்தார்கள். '' நீ ஒரு பெரிய பாவியாயிருக்கவேண்டும். உன் பாவங்களுக்காகக் கடவுள் இத் தண்டனையை உனக்கு அனுப்பியுள்ளார் '' என்று அவர்கள் யோபுவிடம் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21. யோபு கூறிய பதில் : " கடவுள் சர்வ வல்லவர் ; சர்வஞானம், நன்மைத்தனம் நிறைந்தவர். அவர் செய்வது எல்லாம் சரியே. அவர் என்னைக் கொன்றாலும்கூட நான் அவரை நம்புவேன். உலக முடிவில் என் உடல் மீண்டும் உயிர்பெறும். அப்பொழுது நான் கடவுளைக் காண்பேன் ".



22. யோபு கடவுள்மீது கொண்ட நம்பிக்கை, கடவுளை அதிகம் மகிழ்வித்தது. அவரது வியாதி குணமாகி, சொத்துக்களும், பிள்ளைகளும் மீண்டும் கொடுக்கப்பட்டன. யோபு அவர்களுடன் அநேக ஆண்டுகள் மகிழ்வுடன் வாழ்ந்தார்.



23. கடவுள் நமக்கு அனுப்பும் துன்ப துயரங்களை " கடவுள் சித்தம் " என ஏற்றுக்கொள்ளும்படி இக்கதை நமக்குக் கற்பிக்கின்றது. " கடவுளுடைய நாமத்திற்குத்தோத்திரமுண்டாகக்கடவது " என்று யோபுவுடன் நாமும் சேர்ந்து கடவுளை ஆராதித்துப் புகழ வேண்டும்.



24. கடவுள்மீது நம்பிக்கை வைக்கும்படியும் இக்கதை நமக்குக் கற்பிக்கின்றது. கடவுள் நம்மை நேசிக்கிறார் ; நமது நன்மைக்காகவே துன்ப துயரங்களை நமக்கு அனுப்புகிறார். " அவர் என்னைக் கொன்றாலும்கூட அவரை நம்புவேன் " என்று யோபுவுடன் நாமும் சேர்ந்து சொல்லுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. அசிரியர்கள் இஸ்ரயேல் நாட்டின்மீது படையெடுத்து, அநேக பட்டணங்களையும், கிராமங்களையும் அழித்து நிர்மூலமாக்கினார்கள்.



2. இஸ்ரயேல் மக்களில் அநேகரைக் கைது செய்து, அசிரிய நாட்டிற்குக் கடத்திச் சென்றனர்.



3. அசிரிய நாட்டு மன்னன் ஒரு கொடியவன். இஸ்ரயேல் மக்களைக் கொடுமையாய் நடத்தும்படி ஆணையிட்டான். அவர்கள் எல்லாவிதமான கடின வேலைகளும் செய்யவேண்டியிருந்தது. அடிக்கடி கொடூரமாய் அடிக்கப்பட்டார்கள்.



4. இஸ்ரயேல் மக்கள் இறந்தவர்களின் சடலங்களைப் புதைக்கக்கூடாதென்றும், கொடிய விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் இரையாகும் விதத்தில் சடலங்கள் வெளியே எறியப்பட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13. ஆனால் தொபியாஸ், "அப்படிப் பேசாதிர். கடவுள் தம் ஊழியர்களுக்கு இவ்வுலகில் சன்மானம் அளிக்காமலிருக்கலாம். ஆனால் மறுவுலகில் நிச்சயம் சன்மானம் அளிப்பார். கடவுள்மீது எப்பொழுதும் நான் நம்பிக்கை கொண்டிருப்பேன்" என்று பதில் கூறினார்.



14. தொபியாசால் வேலை எதுவும் செய்ய முடியாமற்போய்விட்டது. எனவே, அவரது மனைவி உழைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அவள் நெசவுத் தொழில் செய்து வந்தாள். ஒரு நாள் தன் வேலைக்கு ஊதியமாய்க் கிடைத்த ஒரு சிறு வெள்ளாட்டுக்குட்டியை வீட்டுக்குக் கொண்டுவந்தாள்.



15. ஆட்டுக்குட்டியின் கதறல் சப்தத்தைக் கேட்ட தொபியாஸ், "இது ஒருவேளை திருடிக் கொண்டுவரப்பட்டதோ? அப்படியானால் அதை வைத்திருப்பது சட்டவிரோதம். அதன் உரிமையாளரிடம் அதைத் திருப்பிக்கொடுத்துவிடு" என்று கூறினார். அவரது மனைவிக்குக் கோபம் ஏற்பட்டது.



16. "நீங்கள் நேர்மை நாணயத்துடன் வாழ்ந்து தர்மம் அளித்ததற்கு என்ன பயன் கிட்டியது? எல்லாம் வீண்" என்று ஓலமிட்டாள். தொபியாசின் உள்ளம் புண்பட்டது. வீட்டின் மேல் மாடிக்குச் சென்று, உறுதியான நம்பிக்கையுடன் கடவுளை நோக்கிச் செபித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17. தொபியாஸ் தான் விரைவில் மரிக்கப் போவதாக எண்ணினார். எனவே தன் மகனை அழைத்துச் சில புத்திமதிகள் கூறினார் : '' கடவுளை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள் ; தூய்மையாயிரு ; அகங்காரம் கொள்ளாதே ; ஏழைகளுக்குத் தர்மம் கொடு.''



18. மேலும் தொடர்ந்து கூறினதாவது : பல ஆண்டுகளுக்கு முன் வெகு தூரத்திலுள்ள ' இராகேஸ் ' என்னும் பட்டணத்தில் வாழும் ' கபேலூஸ்' என்பவருக்குப் பெரியதொரு தொகை கடனுகக் கொடுத்திருந்தேன். அங்குசென்று, அப்பணத்தைத் திரும்பப் பெற்றுவா. அது உன் தாய்க்கு உதவியாயிருக்கும்.''



19. '' உன்னுடன் உன் பயணத்துக்கு ஒரு தோழனைத் துணையாக அழைத்துச் செல்'' என்றும் கூறினார். இளைஞன் தொபியாஸ் வெளியே வந்ததும், பயணத்திற்கு ஆயத்தமாயிருந்த ஓர் அழகான வாலிபர் அங்கே நிற்பதைக் கண்டான். அவர் மாறு வேடத்தில் வந்திருந்த ஒரு வானதூதர். ஆனால் ஒருவரும் அதை அறியவில்லை.



20. இளைஞன் தொபியாஸ் அவ் வாலிபரை நோக்கி '' என்னோடு ' இராகேஸ் ' என்னும் பட்டணத்திற்கு வரத் தயாராயிருக்கிறீர்களா?'' என்று கேட்டான். அவர் சம்மதிக்கவே, அவரைத் தனது தந்தையிடம் அழைத்துப்போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21. தன் தந்தை தாயிடம் விடைபெற்றுக் கொண்டு, அவ்வாலிபருடன் பயணத்தை ஆரம்பித்தான் இளைஞன் தொபியாஸ். அவ்வாலிபர், தன்னைக் காப்பாற்றுவதற்காக, கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு வானதூதர் என்பது இளைஞன் தொபியாசுக்குத் தெரியாது.



22. முதல்நாள் மாலை இருவரும் 'திகிரீஸ்' நதியை அடைந்தார்கள். தொபியாஸ் தன் கால்களைக் கழுவுவதற்காக அந்த நதிக்குள் இறங்கினான். திடீரென ஒரு பெரிய மீன் அவனை விழுங்க விரைந்து வந்தது.



23. தொபியாஸின் தோழர் "அம்மீனைச் செவுள்களாலே பிடித்து வெளியே கொண்டுவா" என்று கூறினார். தொபியாசும் அவ்வாறே பிடித்துக் கரைக்குக் கொண்டு வந்தான்.



24. இருவரும் அம்மீனை நெருப்பில் வாட்டி, சுவையான உணவு உண்டனர். மீனின் பித்தைத் தன்னுடன் பத்திரமாகக் கொண்டுவருமாறு அந்த வாலிபர் தொபியாசிடம் கூறினார். ஏனெனில், அது ஒரு நல்ல மருந்தாகப் பயன்படக்கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25. பல நாட்கள் பயணத்திற்குப் பிறகு, ஒரு பட்டணம் அவர்கள் கண்களுக்குப்பட்டது. அங்கே தொபியாவின் உறவினர் ஒருவர் வசித்து வந்தார். அவர் பெயர். 'இராகுவேல்' அவருக்கு "சாராள்' என்ற ஒரு மகள் இருந்தாள்.



26. அவர்கள் அப்பட்டணத்தை அடைந்ததும், வாலிபர் தொபியாசை நோக்கி "சாராளை உனக்குத் திருமணம் முடித்துவைக்கும்படி கேள்" என்றார். "அவளது ஏழு கணவர்களையும் அவரவர் திருமணம் முடிந்ததும் பிசாசு அவர்களைக் கொன்றுவிட்டதாகக் கேள்விப்பட்டேனே!" என்று தொபியாஸ் பதிலுரைத்தான்.



27. "பயப்படாதே: தீயவர்கள்மீதுதான், அதாவது கடவுளை எண்ணாமல் திருமணம் செய்பவர்கள்மீதும், செபிக்காதவர்கள் மீதும்தான் பிசாசுக்கு வல்லமையுண்டு. ஆனால் நீயோ உன்னைத் தானே செபத்திற்குக் கையளி" என்றார் வாலிபர்.



28. இராகுவேலும் அவர் குடும்பத்தாரும் தொபியாசைப் பார்த்ததும் ஆனந்தம் கொண்டார்கள். விருந்து தடபுடலாக ஏற்பாடானது. பந்தியில் அமர்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





29. அப்பொழுது தொபியாஸ் இராகுவேலை நோக்கி, ''சாராளை எனக்குத் திருமணம் முடித்து வையுங்கள்'' என்று கேட்டான். ஆனால் அவன் இறந்துவிடுவானோ என்று இராகுவேல் அஞ்சினார். வாலிபர், ''பயப்படாதீர்கள், தொபியாஸ் இறை பக்தியுள்ளவன்'' என்றார்.

30. இராகுவேல் சம்மதித்து, தன் மகளின் வலக் கையைத் தொபியாசின் இடக்கையோடு சேர்த்து, கடவுள் பெயரால் அவர்களை ஆசீர்வதித்தார். இவ்வாறு இஸ்ரயேலரின் பழக்க வழக்கப்படி திருமணம் முடிந்தது.






31. தொபியாஸ் தன் மனைவியை நோக்கி ''நாம் புனிதர்களின் பிள்ளைகள். எனவே, கடவுளை அறியாதவர்கள்போல் நாம் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. கடவுளிடம் செபிப்போம், வா'' என்றான்.

32. அநேக நாட்களாக அவர்கள் உருக்கமாய்ச் செபித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





33. '' இறைவா, தங்கள் வாழ்நாள் முழுவதும் உமக்குப் பணிபுரியும் பிள்ளைகளை எங்களுக்குக் கொடுத்தருளும். ஆண்டவரே எங்கள்மீது இரக்கமாயிரும் '' என்று தொபியாசும் சாராளும் செபித்தனர். அவர்களின் செபம் அக்கினிச் சுவாலைபோல் இறைவனை நோக்கிச் சென்றது.

34. சாராளின் முந்தின கணவர்களைப்போல தொபியாசும் விரைவில் இறந்துவிடுவானென்று இராகுவேல் எதிர்பார்த்தார். எனவே ஒரு கல்லறை தோண்டும்படி ஏற்பாடும் செய்துவிட்டார்.





35. எதிர்பார்த்ததுபோல் அவன் இறக்காததால், இராகுவேல் மிகவும் சந்தோஷமும் ஆச்சரியமும் கொண்டு, '' ஆண்டவரே உம்மை வாழ்த்துகிறோம், ஏனெனில் எம்மீது இரக்கப்பட்டு கருணை காட்டியுள்ளீர். நீர் ஒருவரே கடவுள் என்பதை எல்லா நாடுகளும் அறியட்டும் '' என்று செபித்தார்.

36. தொபியாஸ் ஒரு சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்தான். தொபியாசுடன் வந்த வாலிபர் (மாறுவேடத்திலிருந்த வானதூதர்) அச்சமயம் ' இராஜேஸ் ' என்னும் பட்டணத்திற்குச் சென்று ' கபேலுஸ் ' கொடுக்கவேண்டிய பணத்தைப் பெற்று வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



37. வாலிபர் திரும்பி வந்ததும், தான் வீட்டுக்குத் திரும்பவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று இராகுவேலிடம் தொபியாஸ் கூறினான். தொபியாசுக்கும் சாராளுக்கும் இராகுவேல் இறுதி ஆசீர் அளித்தார்.



38. விலையுயர்ந்த அன்பளிப்புக்களையும் பயனுள்ள பற்பல சாமான்களையும் இராகுவேல் ஒட்டகங்களில் ஏற்றி, பயணத்திற்குத் தயாராக வைத்திருந்தார். தொபியாசும் சாராளும் அநேகப் பணியாட்களின் துணையோடு புறப்பட்டனர்.



39. இதற்கிடையில் தொபியாசின் வீட்டில் அவனது தந்தையும் தாயும் அவனைப்பற்றிக் கவலைப் பட்டுக்கொண்டிருந்தனர். குறிப்பிட்ட நாளில் அவன் திரும்பி வராததால் இருவரும் அழத்தொடங்கினர்.



40. தாய் அடிக்கடி வீட்டுக்கு வெளியே வந்து தன் மகன் வருகிறானா என்று நாலாபக்கமும் திரும்பிப் பார்ப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



41. தங்களுடன் வந்த பணியாட்கள் மெதுவாக வந்துகொண்டிருந்தார்கள். சாராளே அவர்களோடு சேர்ந்துவரும்படி ஏற்பாடு செய்துவிட்டு, தொபியாசும் அந்த வாலிபரும் வேகமாய் நடந்து சென்றனர்.



42. வரும் வழியில் வாலிபர் தொபியாஸை நோக்கி, ''பத்திரப்படுத்தி வைத்த அந்த மீனின் பித்தை உன் தந்தையின் கண்களில் பூசு'' என்ருர். அவர்கள் வீட்டுக்கு அருகாமையில் வந்துகொண்டிருந்தபோது தாய் தொபியாசைப் பார்த்துவிட்டாள். எத்துனே மகிழ்ச்சி அவளுக்கு!



43. உடனே தன் கணவரிடம் விரைந்து சென்று தொபியாசின் வருகையை அறிவித்தாள். தொபியாஸ் வீட்டிற்குள் நுழைந்ததும், தன் தந்தையை அன்போடு அரவணைத்து முத்தமிட்டான். வயோதிகத் தந்தை ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.



44. தொபியாஸ் தான் வைத்திருந்த மீனின் பித்தைக் கொஞ்சம் எடுத்துத் தன் தந்தையின் கண்களில் பூசினன். ஒருவித வெள்ளேத் தோல் கண்களிலிருந்து வெளியேறவே, அவர் மீண்டும் கண் பார்வை பெற்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





45. உடனே வயோதிகரும் அவர் மனைவியும் மண்டியிட்டு, "ஆண்டவரே, நாங்கள் உம்மை வாழ்த்துகிறோம். ஏனெனில், நீர் எங்களைக் காப்பாற்றியிருக்கிறீர்" எனப் புகழ்ந்தனர். "அப்பா, எனக்குத் துணையாய் வந்த இவ்வாலிபருக்கு நமது சொத்துக்களில் பாதியைக் கொடுக்க வேண்டும்.

46. என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றியவர் அவரே. நீங்கள் கண்பார்வை பெற்றதற்கும் அவர் தான் காரணம்." அப்பொழுது வாலிபர் முன்னால் காலெடுத்து வைத்தார். என்ன ஆச்சரியம்! ஒரு வான தூதராகக் காட்சியளித்தார்.







47. "கடவுளுடைய சந்நிதியில் எப்பொழுதும் நின்றுகொண்டிருக்கும் வானதூதர் ரப்பேல் நான் தான். நீர் செய்த செபம், ஏழைகளுக்குச் செய்த சேவை, உபகாரம், மரித்தவர்களை அடக்கம் செய்தது போன்ற உமது நற்செயல்கள் அனைத்தையும் அவ்வப்போது கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தேன்.

48. கடவுள் உம்மீதுள்ள அன்பால், உமக்குப் பெரும் சோதனையை அனுப்பினார். இப்பொழுது உம்மைக் காப்பாற்றிவிட்டார். கடவுளை வாழ்த்தி, அவருக்குப் புகழ்ச்சிக் கீதம் பாடுங்கள்" என்று கூறி வானதூதர் மறைந்துவிட்டார். எல்லோரும் மண்டியிட்டுக் கடவுளை வாழ்த்திப் புகழ்ந்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. ஒலொப்பெர்னஸ் என்பவன் அசிரிய நாட்டின் முக்கிய சேனுதிபதி. அவனது இராணுவத்தில் 1,20,000 போர் வீரர்கள் இருந்தனர். அண்டை நாடுகள் அனைத்தையும் கைப்பற்ற வேண்டுமென்று அவன் திட்டமிட்டான்.



2. அவன் தன் இராணுவத்தை மேற்குப் பக்கமாய் நடத்திச் சென்று, ஒவ்வொரு நாடாகக் கைப்பற்றிக்கொண்டே போனுன். வழியிலிருந்த எல்லாவற்றையும் அழித்து நிர்மூலமாக்கினுன்.



3. இறுதியாகப் பாலஸ்தீனத்தை அடைந்தான். வழியில் முதலாவதாக அவன் சந்தித்த பட்டணத்தின் பெயர் பெத்தூலியா. அப்பட்டணத்தைச் சுற்றிலும் கோட்டைச் சுவர்கள் எழுப்பப்பட்டு, பலப்படுத்தப்பட்டிருந்தது.



4. ஒலொப்பெர்னஸின் இராணுவம் பட்டணத்தைச் சுற்றிலும் வளைத்துக்கொண்டது. பட்டணத்தின் பிரதான குருவாகிய ஓசியாஸ், மக்களை நோக்கி "அதைரியப்படாதீர்கள்; கடவுள்மீது முழு நம்பிக்கை வையுங்கள். சரண் அடைவதைவிடச் சாவது மேல்" என்று அறிவுரை கூறினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






5. பிறகு மக்கள் அனைவரும் செபித்தனர் : '' ஓ இறைவா, உமக்கு விரோதமாய் பாவம் செய்துள்ளோம். நாங்கள் தண்டிக்கப்படவேண்டியவர்களே. ஆனால் எங்கள்மீது இரக்கமாயிரும். ஏனெனில், நீர் நல்லவர். எங்கள் எதிரிகளிடமிருந்து எங்களை விடுவித்தருளும்.'' எல்லாரும் தைரியத்துடன் எழுந்து, தங்கள் பட்டணத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று ஒரே தீர்மானமாயிருந்தனர்.

6. ஒலொப்பெர்னஸ் முதலில் பட்டணத்தைத் தாக்கவேண்டுமென்று முயற்சித்தான். ஆனால் பட்டணத்தின் சுற்றுப்புறங்களெல்லாம் பலத்த தற்காப்புடன் இருப்பதால், பட்டணத்தைப் பலவந்தமாய்க் கைப்பற்றுவது அவ்வளவு எளிதல்ல என்று அவனுடைய ஆலோசகர்கள் கூறினர்.





7. எனவே, பட்டணத்தைத் தாக்குவதற்குப் பதிலாக, பட்டணத்தில் பஞ்சத்தையும் வறட்சியையும் ஏற்படுத்துவது நல்லது என்று ஒலொப்பெர்னஸ் எண்ணினான். பட்டணத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்லும் கால்வாயை உடைத்துத் துண்டித்தான்.

8. மேலும் பட்டணத்திற்கு வெளியேயுள்ள நீர் ஊற்று ஒவ்வொன்றிலும் நூற்றுக்கணக்கான சேவகர்களைக் காவல் வைத்தான். இருபது நாட்களுக்குப் பிறகு பட்டணத்திலுள்ள தண்ணீர் தேக்கங்கள் எல்லாம் வறண்டுபோயின. பட்டணத்திலுள்ளோர் அனைவரும் தாகத்தால் அவதியுற்றனர். சிலர் சாகவும் நேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9. தாகத்தால் மிகவும் அவதியுற்ற இஸ்ரயேல் மக்கள், ஓசியாசை அணுகி '' இனியும் இதற்குமேல் எங்களால் தாகத்தை சமாளிக்க முடியாது. தாகத்தால் மடிவதைவிட எதிரியின் வாளுக்கு இரையாவதுமேல். வாருங்கள், எதிரியிடம் சரணடைவோம் '' என்றார்கள்.



10. ஓசியாஸ் கூறுவார்: '' சகோதரரே தைரியத்தைக் கைவிடாதீர்கள். இன்னும் ஐந்து நாட்களுக்குச் செபிப்போம். ஒருவேளை இறைவன் நம்மைக் காப்பாற்றுவார். ஐந்து நாட்களுக்குப் பொறுத்துப் பார்ப்போம். அதன் பிறகும் இறைவனது உதவி கிட்டாவிடில் நாம் சரணடையலாம்.''



11. அச் சமயத்தில் பெத்தூலியாவில் யூதித் என்னும் ஒரு விதவை வாழ்ந்து வந்தாள். அவள் செல்வமுள்ளவளாகவும், அழகுள்ளவளாகவுமிருந்த போதிலும், வாழ்வில் இன்பம் அனுபவிக்கவில்லை. மாறாக, ஓர் அறையில் தனித்து வாழ்ந்து, செபத்திலும் அலுவலிலும் ஈடுபட்டிருந்தாள்.



12. அவள் பெரிய தபமுயற்சிகளும் செய்து கொண்டிருந்தாள்: தினசரி ஒருசந்தியாயிருப்பாள். உரோமத்தாலான ஆடை அணிந்துகொள்வாள். மிகத் தூய்மையான வாழ்வு நடத்திவந்தாள். ஐந்து தினங்களில் சரண் அடையலாமென்று ஓசியாஸ் கூறியதை அவள் கேள்விப்பட்டதும், அவள் மனம் புண்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



13. யூதித் பெரிய குருவிடம் கூறுவாள் : ''நீர் அவ்வாறு பேசுவதற்கு எப்படித் துணிந்தீர் ? உமது வார்த்தைகள் நம்மீது இறைவனது கோபத்தைத் தான் வரவழைக்கும். இறைவனது இரக்கத்திற்குக் காலவரம்பு காட்டுவதற்கு எப்படித் துணிந்தீர் ?''



14. யூதித், மக்களை நோக்கிக் கூறுவாள் : ''இடைவிடாது செபியுங்கள் ; இறைவனுக்கு முன்னால் உங்களைத் தாழ்த்திக்கொள்ளுங்கள். உங்களது பாவங்களுக்கு இது சரியான தண்டனைதான் என்று ஏற்றுக்கொள்ளுங்கள். அவரது இரக்கப் பெருக்கத்தின்மீது நம்பிக்கை வையுங்கள். அவருக்குச் சித்தமாயிருக்கும்பொழுது நம்மைக் காப்பாற்றுவார்.''



15. அவளது வார்த்தைகளைக் கேட்ட ஓசியாசும் மக்களும் ஆறுதல் அடைந்தனர். யூதித் தன் அறைக்குத் திரும்பி, தாழ்ச்சியின் அடையாளமாகத் தன் தலையில் சாம்பலைத் தூவி, முழங்காலிலிருந்து செபித்தாள்.



16. ''ஓ இறைவா, எங்கள் பகைவர்கள் தங்கள் வலிமையின்மீதும், ஆயுத பலத்தின்மீதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாங்களோ உம்மீது மட்டுமே நம்பிக்கை வைக்கிறோம். அவர்களிடமிருந்து எங்களை விடுவித்தருளும். எனது திட்டத்தை நிறைவேற்ற எனக்கு வலிமையையும், தைரியத்தையும் அளித்து என்னைக் காப்பாற்றியருளும்.''


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




17. செபம் முடிந்ததும், யூதித் எழுந்து, தனது கைம்பெண்ணுக்குரிய கோலத்தை அகற்றினுள்; வாசனைத் திரவியங்களை தன்மீது பூசி, அழகான ஆடையும், பலவிதமான பொன் அணிகலன்களையும் அணிந்துகொண்டாள்.



18. பிறகு தன் தோழியை அழைத்துக்கொண்டு, மலைக் கணவாய்கள் வழியாக எதிரிகளின் முகாமுக்குச் சென்றுள். அசீரியரின் காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தி, ''எங்கே போகிறீர்கள்?'' என்று கேட்டனர். ''உங்கள் பெரிய சேனுதிபதி ஒலொப்பெர்னசைப் பார்க்க விரும்புகிறேன்'' என்று யூதித் பதில் கூறினுள்.



19. காவலர்கள் அவர்களை ஒலொப்பெர்னசிடம் அழைத்துச் சென்றுர்கள். யூதித் தலை குனிந்து வணக்கத்துடன் கூறுவாள்: ''நீர் பெரிய சேனுதிபதி என்பதை நான் அறிவேன். நீர் நிச்சயம் பட்டணத்தைக் கைப்பற்றி மக்கள் அனைவரையும் கொன்று விடப்போகிறீர். எனவே அவர்களை விட்டுவிலகி, உமது பாதுகாப்பை நாடியுள்ளேன்.''



20. இவ்வார்த்தைகள் ஒலொப்பெர்னசுக்கு தலையில் ஐஸ் வைத்ததுபோலிருந்தன. அவை பசப்பு வார்த்தைகள் என்பதை அவன் அறியான். அவள் விருப்பம்போல் முகாமைச் சுற்றிப்பார்க்க அவளுக்கு அனுமதி அளித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21. ஒலொப்பெர்னஸ் பெரிய அக்கிரமக்காரன். கொடியவன் (ஆயிரக்கணக்கான மககளைக் கொலை செய்திருந்தான்) மட்டுமல்ல, அகங்காரமும் படைத்தவன். தனது படைபலத்தால், இறைவனைவிடத் தான் பெரியவனென்றும், அதிக சக்தி வாய்ந்தவன் என்றும் எண்ணினன்.



22. அவன் ஓர் இரவு யூதித்தை கௌரவிக்கும் பொருட்டு ஒரு பெரிய விருந்து வைத்தான். தனது பக்கத்தில் அவளை அமரச் செய்தான். அவன் மிதமிஞ்சி மது அருந்தியதால், மதிமயங்கிப் படுக்கையில் சாய்ந்தான்.



23. யூதித் எழுந்து அவன் அருகே நின்றாள். மனத்திடனையும் சக்தியையும் தனக்கு அளிக்குமாறு இறைவனிடம் செபித்தாள். பிறகு, கூடாரத்தில் தொங்கிக்கொண்டிருந்த வாளை எடுத்து, ஒரே வெட்டில் ஒலொப்பெர்னசின் தலையைத் துண்டித்தாள்.



24. தன் தோழி கொண்டுவந்திருந்த கோணிப் பைக்குள் அத் தலையைப் போட்டுக்கொண்டு, கூடாரத்தைவிட்டுப் புறப்பட்டனர். இறைவனுக்கு விரோதமாய் அநேகமுறை தேவதூஷணம் கக்கினவனும், இறைவனைவிடத் தான் பெரியவன் என்று கருதியவனுமான அந்த அக்கிரமக்காரன் இவ்வாறு மடிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25. யூதித் தன் தோழியுடன் அசீரியரின் முகாமை விட்டுக் கடந்து, பெத்தூலியாவுக்குத் திரும்பிச் சென்று, ஒலொப்பெர்னசின் தலையை மக்கள் அனைவருக்கும் காட்டினுள்.



26. உடனே மக்கள் அனைவரும் தாங்கள் இழந்த தைரியத்தை மீண்டும் பெற்றதாக உணர்ந்தார்கள். ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அசீரியர்களைத் தாக்குவதற்காகப் பட்டணத்தைவிட்டு ஓடினுர்கள்.



27. இவர்கள் வருவதைக் கண்ட அசீரியர்கள், ஒலொப்பெர்னசை எழுப்புவதற்காக அவனது கூடாரத்துக்கு ஓடினுர்கள். ஆனுல் அங்கே அவனது தலையில்லா முண்டத்தைத்தான் கண்டார்கள்.



28. பீதி அடைந்தார்கள். பயம் மேலிட, என்ன செய்வது என்று புரியாமல் இராணுவம் முழுவதும் நிலைதவறி பயந்து நாலாபக்கமும் சிதறி ஓடினர். பெத்தூலியா மக்கள் அவர்களைப் பின்தொடர்ந்து விரட்டி, அநேகரைக் கொன்றனர். இவ்வாறு பெத்தூலியா விடுவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



29. பெரிய குரு யூதித்தை ஆசீர்வதித்துக் கூறுவார்: "பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீ, ஏனெனில், உன் மக்களைக் காப்பாற்றுவதற்காக உன் உயிரை ஆபத்துக்குள்ளாக்கினாய். நீ தூய்மையாகவும், பதிவிரதையாகவும் வாழ்ந்துவந்ததால், வீரமுள்ள செயலைச் செய்துள்ளாய்."



30. மக்கள் பூரிப்படைந்தார்கள். மகிழ்வுடன் ஆடிப்பாடினார்கள்: "ஓ யூதித்! நம் நாட்டின் புகழும், அக்களிப்பும் நீயே. நம் மக்களின் மகிமையும் நீயே."



31. யூதித் கூறிய பதில்: "புகழ் மாலையை இறைவனுக்குச் சூட்டுங்கள், ஏனெனில் அவர் நல்லவர். நம்மைக் காப்பாற்றியவர் அவரே. பலவீனமான பெண்ணாகிய என்னை அதற்கு உபயோகித்திருக்கிறார். ஓ இறைவா, நீர் உன்னதர், வல்லமை மிக்கவர். உமது இரக்கம் என்றென்றும் நிலைத்திருக்கும்."



32. யூதித் என்னும் வீரப் பெண்மணி பரிசுத்த கன்னிமரிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறாள். கன்னிமரி யூதித்தைவிட இன்னும் அதிகமாக பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள். உலக மீட்புக்காகத் தன் மகனின் மரணத்தை ஏற்றுக்கொண்டதால் கன்னிமரி யூதித்தைவிட அதிகத் தைரியத்தைக் காண்பித்துள்ளாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAM/191

ஆ

## பட விளக்கக்[...]டிய வெளியீடுகள்

### புனிதர்களின் சரிதை

1. புனித மார்கரீத் மரியம்மாள்
2. புனித பிரான்சிஸ் சவேரியார்
3. புனித தோமினிக் சாவியோ
4. புனித குழந்தை இயேசுவின் தெரசாள்
5. புனித பெர்னதெத்
6. புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா — புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்
7. புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார்
8. புனித பிரான்சிஸ் அசிசியார்
9. புனித ஜான் போஸ்கோ
10. புனித பதுவை அந்தோணியார்
11. புனித மாக்சிமிலியான் கோல்பே
12. புனித லொயோலா இஞ்ஞாசியார்
13. அன்னை பாத்திமா
14. சிவந்த மணல் (புனித அருளானந்தரின் வாழ்க்கை வரலாறு)

### மீட்பின் வரலாறு

1. தொடக்க நிகழ்ச்சிகள்
2. பெருந்தலைவர் மோயீசன்
3. வாக்களிக்கப்பட்ட நாடு
4. பேரரசர் தாவீது
5. கடவுளின் இறைவாக்குரைஞர்கள்
6. புண்ணியவான்களும் புண்ணியவதிகளும்
7. இறையரசை முன்னறிவித்தல்
8. இறைவனுக்காக உயிர்நீத்தல்
9. மீட்பர் பிறந்துள்ளார்
10. இயேசுவின் புதுமைகள்
11. அன்புச் சொல்லும் ஆச்சரியமிகு செயலும்
12. மாபெரும் நல்லாசிரியர்
13. வாரும் இயேசுவே
14. எல்லா மக்களுக்காகவும் உயிர்நீத்தல்
15. உயிர்ப்பும் மாட்சிமையும்

கடவுள் நம்மோடு (இயேசுவின் வரலாறு)

---

கிடைக்குமிடம் :

**இன்ஸ்டிட்டியூட் ஆப் தி ஹார்ட் ஆப் ஜீசஸ்,**
**பெஸ்கி கல்லூரி, (அஞ்சல்)**
**திண்டுக்கல் - 624 004.**

15/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org